31st August 1961]

Tax on Marriages

* 1552 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to levy a tax on marriages as one of the measures of family planning?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that increase in population is mainly due to early marriages? If so will the Government levy such a tax on early marriages?

THE HON. SRI M. A. MANICKAVELU : Government have no such proposal.

Takkavi Loans

* 1553 *Q.*—SRI K. R. VISWANATHAN (on behalf of SRI N. R. THIAGARAJAN) : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுக்கா ஓடைப்பட்டி விவசாயிகள் கிணறு ஆழப்படுத்த தக்காவி கடன் கேட்டு 1958-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதியில் ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனுவின்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No such application was received by the Collector.

The Krishna-Godavari Waters .

* 1554 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிருஷ்ணா, கோதாவரி தண்ணீரின் உபயோகத்தைக் குறித்து ஆராய்வதற்கு மத்திய சர்க்காரால் குழு நியமிக்கப்பட்டிருப்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) அப்படியானால், நம் மாநிலத்தின் தேவையைக் குறித்து முறையிடும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : (அ) Yes, Sir, through Press reports.

(இ) Yes, Sir. The Government propose to urge in the Southern Zonal Council which is already seized of the matter, that the Krishna-Godavari Commission should hear the representation of this State before finalising its recommendations.

SRI S. M. ANNAMALAI : செய்திக் குறிப்பிலிருந்து, மத்திய சர்க்கார் இது சம்பந்தமாக கமிஷன் நியமித்திருப்பதுபற்றித் தெரிவதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். மத்திய சர்க்காரிடமிருந்து நமது அரசாங்கத்திற்குத் தகவல் ஏதாவது வந்திருக்கிறதா? அப்படித் தகவல் வராமலிருந்தால், ஸோனல் கவுன்ஸிலில் இதுபற்றி பரிசீலிப்பதற்குப் பதிலாக அந்தக் கமிஷனிடத்திலேயே பரிசீலிக்கும் உத்தேசம் இருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN : நமக்கு எந்தவிதமான தகவலும் இதுவரை வரவில்லை. இருந்தாலும், ஸோனல் கவுன்ஸில் மூலமாக அந்தக் கமிஷனிடம் நம்முடைய பிரச்னையைச் சொல்லி முடிவு செய்ய வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தினுடைய எண்ணமாகும்.